விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 215 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 06 வெள்ளிக்கிழமை (22.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


இந்தியாவின் புதிய ஜனாதிபதியாக பழங்குடியினப் பெண் திரௌபதி முர்மு தேர்வு

## அறிவில்லாத போராட்டக்காரர்களின் விளைவே ரணில் ஜனாதிபதியானது

### விமல் வீரவன்ச கடும் விமர்சனம்



(கொழும்பு)

ஞானமில்லாத, நோக்கமில்லாத, அறிவில்லாத போராட்டக்காரர்களின் செயற்பாடுகளின் பிரதிபலனாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவிக்கு வந்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் வழிமுறைத் திட்டமோ, அறிவோ இல்லாத போராட்டம் காரணமாக இறுதியில் ரணில் ஜனாதிபதிப் பதவிக்கு வந்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடை 11

## எரிபொருள் விநியோகத்தை குழப்ப சிலர் முயற்சி

### யாழ். மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் பலரும் எரிபொருள் பங்கீட்டு அட்டை முறைமையின் நன்மைகளை வரவேற்கும் சமயம் ஒரு சிலர் இந்த திட்டத்தை குழப்புவதற்கு முனைவதையும் நாங்கள் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே அனைவரும் ஒத்துழைத்து இந்த முறைமை மூலம் சீரான எரிபொருள் விநியோகத்தை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று 11

### நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்ல

# நான் என்றுமே மக்கள் நண்பன்

### மக்கள் கோரும் மாற்றத்தை ஏற்படுத்த தயார் - ரணில்



(கொழும்பு)

நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்ல; நான் என்றுமே மக்களின் நண்பன். மக்கள் கோரும் மாற்றத்தை ஏற்படுத்தத் தயாராக இருக்கின்றேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியாக ரணில் பதவியேற்பு



03

### இம் மாத இறுதிக்குள்

## எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்படும்

### லிட்ரோ தெரிவிப்பு

(கொழும்பு)

இம்மாத இறுதிக்குள் எரிவாயு தட்டுப்பாடு பிரச்சினை தீர்க்கப்படும் என லிட்ரோ காஸ் நிறுவன தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்குள் இலங்கைக்கு சுமார் 11

## இளம் செயற்பாட்டாளர்களாலேயே இந்த மாற்றம் சாத்தியமானது

### ரணிலும் இதை நினைவில் வைத்திருப்பார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு)

இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டினால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என 11

## ரணில் தலைமையில் இன்று புதிய அமைச்சரவை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை நியமனம் இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது என ஜனாதிபதி அலுவலகம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது எனவும் ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டின் புதிய பிரதமராக தினேஸ் குணவர்தன?



(கொழும்பு)

புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கிடையில், புதிய பிரதமர் நியமனம் இன்று இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே டலஸ் மற்றும் 11

## கோ ஹோம் ரணில் போராட்டத்திற்கு இடம் ஒதுக்கினார் ஜனாதிபதி

### மனோ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

போராட்டக்காரர்கள் தமது "கோ ஹோம் ரணில்" போராட்டத்தை தடையின்றி நடத்த [illegible] பூங்கா பிரதேசம் ஒதுக்கித் தரப்படும் என்று அதிபர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கட்சித்தலைவர்கள் கூட்டத்தின் போதே அதிபர் ரணில் விக்கிரம 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழில் எரிபொருள் பங்கீட்டு அட்டை பெறுவதற்கு

## வாகன உரிமை மாற்றம் அவசியமில்லை

### மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரி பொருள் பங்கீட்டு அட்டை பெறுவதற்கு வாகன உரிமை மாற்றம் அவசியம் இல்லை என மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் வாகன இலக்கத் தின் அடிப்படையில் பங்கீட்டு அட் டைக்கு எரிபொருள் விநியோகிக் கப்படும் நிலையில் சில கிராம சேவை யாளர்கள் வாகன உரிம மாற்றம் பெறாத வர்களுக்கு பங்கீட்டு அட் டையை விநி யோகிக்க மறுப்பதாக குற்றச்சாட்டுக் கள் எழுந்த நிலையில் மேலதிக அர சாங்க அதிபரைத்தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய சூழ்நிலையில் மோட் டார் சைக்கிள்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்கு உரிமை மாற்றம் அவசியமானதாக கருதப்படவில்லை.

குறித்த பிரதேசத்தின் கிராம சேவையாளர் எரிபொருள் அட்டையை வழங்கும்போது தனது பிரிவில் உரிமை மாற்றம் பெறாதவர்களிடம் தற்காலிக உறுதிப்படுத்தல் கடிதங்களை பெற்று அவர்களுக்கு எரிபொருள் அட்டையை வழங்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,33)


## பெண் உதவியாளர் தேவை

வடமராட்சியில் வயது வந்த தாயை பராமரிப்பதற்கு நடுத்தர வயதுடைய பெண் உதவியாளர் தேவை. (C-4639)

077 652 7283

## வான் வாடகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு Hiace வான்கள் மாதாந்த வாடகைக்கு சாரதி இல்லாமல் நீண்ட கால குத்தகைக்குத் தேவை (12217)

077 839 5849

## அன்பு திருமண சேவை

பதிவு இல. FIN/BR/1139

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற டொக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகம் மற்றும் டிவோஸ் மணமகன்/மணமகள் தேவை எனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர்.

077 844 8942

யாழ்ப்பாணம் (12218)


## அகில இலங்கைத் திருமுறை மன்றப் பொதுக்கூட்டம்

மேற்படி அ.இ. திருமுறை மன்றப் பொதுக்கூட்டம் புதிய நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகவும் சைவ சமயச் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் மறைந்த எம் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் மற்றும் உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாகவும் கூடவுள்ளது. மன்ற அங்கத்தவர்களையும் ஏனைய சைவச் சான்றோரும் இதில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

இடம் : சிவதொண்டன் நிலைய திருமுறை மண்டபம், கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

காலம் : 24.07.2022 காலை 9.00 மணிமுதல் 10.30 மணி வரை (ஞாயிற்றுக்கிழமை)

செயலாளர்
செ.பாலச்சந்திரன்

(C-4636)

## சிங்காரவேலவன் சிவ காயத்ரி சுந்தர சொர்க்க வாயில் சந்நிதானம்

### அன்னதான அறிவித்தல்

இன்றையதினம் 22.07.2022 நண்பகல் 12 மணிக்கு நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலய ஈசான பாகத்தில் அமைந்துள்ள மேற்படி தேவஸ்தானத்தில் அவுஸ்திரேலியாவில் இயங்கி வருகின்ற தன்னார்வ தொண்டு நிறுவனமான தர்மா பௌண்டேசன் நிறுவனத்தினால் அன்னதானம் வழங்கப்படவுள்ளது. அடியவர்கள் அன்னதானத்தில் பங்குபற்றி பயனடையுமாறு வேண்டுகின்றோம்.

சுபம்

இங்ஙனம்
இராஜ ஸ்ரீ சிவகமல்ராஜ் குருக்கள்
பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்
மேற்படி தேவஸ்தானம்

(C-4638)


# நேற்று பதவியேற்ற புதிய ஜனாதிபதிக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்









இலங்கைத் திருநாட்டின்
இணையில்லா தலைவனே வருக!
இன்னல் போக்கவந்த
இதயதீபமே வருக!
இருண்ட இலங்கையின்
ஒளிக்கீற்றே வருக!
பொருளாதார மீட்பின்
மதிநுட்பமே வருக!
எதிரிகள் பயந்தோடும்
இராஜதந்திரியே வருக!
அரசியல் தேர்ந்த தலைமகனே வருக!
புதிய ஜனாதிபதியே வருக!
தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய
தேசியத் தலைவரே வருக!
கௌரவ ரணில் விக்கிரமசிங்கவே வருக!
நிலையான பொருளாதாரத்துடன்
ஐக்கிய சமாதான வாழ்வு தருக...

நல்லூர்த் தொகுதி
மக்கள் சார்பாக

லயன். இனுவையூர் வி.கே. குகானந்தன் J.P
உறுப்பினர் - நல்லூர் பிரதேச சபை, யாழ்ப்பாணம்.
ஐக்கிய தேசியக் கட்சி

UNITED NATIONAL PARTY
ஐக்கிய தேசியக் கட்சி

(C-4640) (12220)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை விட்டு வெளியேறுமாறு
# கோட்டாவுக்கு சிங்கப்பூர் அரசு அறிவிப்பு

(சிங்கப்பூர்)

**இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு வெளியேறுமாறு சிங்கப்பூர் அரசாங்கம் அறிவித்துள்ளது.**

விசாக் காலம் நீடிக்கப்படாது எனவும் நாட்டை விட்டு வெளியேறுமாறும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

15 நாட்களுக்கு மட்டுமே கோட்டாபய ராஜபக்ஷ, அவரது மனைவி மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களை நாட்டில் தங்க சிங்கப்பூர் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

அந்த கால அவகாசம் முடிவடைந்த பின்னர் உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு கோட்டாபய ராஜபக்ஷவிற்கு அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற பாரிய மக்கள் புரட்சியின் காரணமாக மாலைதீவுக்கு தப்பிச் சென்ற கோட்டாபய, மாலைதீவிலும் கடும் அழுத்தம் ஏற்பட்டதன் காரணமாக பிரத்தியேக விமானம் மூலம் சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் கோட்டாபய ஒரு போர்க்குற்றவாளி என்றும், அவரை ஏன் சிங்கப்பூர் அரசு நாட்டிற்குள் அனுமதித்தது என்றும் சிங்கப்பூரில் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதன் காரணமாக ஏற்பட்டிருக்கும் அழுத்த நிலையில் கோட்டாபயவை சிங்கப்பூரில் இருந்து வெளியேறுமாறு சிங்கப்பூர் அரசு எழுத்து மூல அறிக்கையை வெளியிட்டுள்ளது. (நி-6)

# ஜனாதிபதியின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமனம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளராக சமன் ஏக்கநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (நி-6)

# புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற தயார் - அமெரிக்கா

(கொழும்பு)

புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சவாலான காலங்களில், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் ஜனநாயகம் மற்றும் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதற்கும் அனைத்து இலங்கையர்களுக்கும் நிலையான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்கு அனைத்து தரப்பினரும் தங்கள் முயற்சிகளை இரட்டிப்பாக்குவது கட்டாயமாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# ரணில்-சஜித் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவருக்கும் இடையில் நட்பு ரீதியாகவும் நேர்மையாகவும் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், அரசியல் சந்தர்ப்பவாதிகளுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காது தேசிய ஒருமித்த கருத்தை ஏற்படுத்தும் வகையில் பாராளுமன்ற குழுக்கள் முறைமையினை பலப்படுத்துவதற்கு இதன்போது முன்மொழியப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

# 8 ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் பதவியேற்பு



(கொழும்பு)

நாட்டின் 8 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் பிரதம நீதியரசர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (நி-6)

# ஜனாதிபதியின் பதவிப் பிரமாண நிகழ்வில் ஏற்பட்ட மின்தடை
## திட்டமிட்ட சதியா?-விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவிப் பிரமாண நிகழ்வின் போது பாராளுமன்றத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் பத்விப் பிரமாணம் செய்து கொண்டார்.

குறித்த நிகழ்வினை நேரடி ஒளிபரப்பு செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனினும், ஜனாதிபதி பாராளுமன்ற வளாகத்திற்குள் நுழைந்ததையடுத்து நேரடி ஒளிபரப்பு தடைப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் ஏற்பட்ட திடீர் மின்தடை காரணமாக இந்த இடையூறு ஏற்பட்டதாக பின்னர் தெரிவிக்கப்பட்டது.

மின்சாரம் துண்டிக்கப்படும் போது, மின்பிறப்பாக்கிகள் இரண்டு முதல் மூன்று விநாடிகளுக்குள் இயக்கப்படும்.

எனினும், புதிய ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வின் போது குறைந்தது 10 நிமிடங்களுக்கு மின்சாரம் தடைப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வினை நேரலையில் ஒளிபரப்ப முடியவில்லை.

திடீர் மின்தடை தொடர்பான விசாரணை குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக இது திட்டமிட்ட நாசகார நடவடிக்கையா? என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# ஜனாதிபதி தெரிவில் மக்களின் கருத்து புறக்கணிப்பு
## ஓமல்பே சோபித தேரர்

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட எட்டாவது ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட விடயத்தில் பொதுமக்களின் கருத்து புறக் கணிக்கப்பட்டுள்ளதாக ஓமல்பே சோபித தேரர் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் கருத்துக்கள் குறித்து கொஞ்சமும் கவனத்திற்கொள்ளவில்லை.

இந்நிலையில், தற்போதைக்கு மகாநாயக்கர்களின் ஆலோசனைப்படி உடனடியாக சர்வகட்சி அரசாங்கமொன்று நிறுவப்பட வேண்டும். அதன் மூலம் பொதுமக்களின் துன்ப, துயரங்களைப் போக்குவதற்கான செயற்பாடுகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-6)

# கோட்டாவை கைது செய்யக்கோரி பிரான்ஸில் கவனயீர்ப்பு போராட்டம்




(பாரிஸ்)

உலகளாவிய நியாயாதிக்கத்தின் கீழ் கோட்டாபய ர்ராஜபக்ஷவை சிங்கப்பூர் அரசு கைது செய்யக் கோரும் தொடர் போராட்டங்களின் வரிசையில் தலைநகர் பாரிஸில் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III– 2022

## 9 ஆவது தகுதிகாண் போட்டியில் கே.சி.சி.சி அணி வெற்றி



இலங்கைக் கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும்.50 ஓவர் கொண்ட தொடரில் கே.சி.சி.சி அணி, ரி.சி.சி அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி அணி முதலில் களத் தடுப்பை தெரிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய T.C.C அணி 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 158 ஓட்டங்களை பெற்றது.

தர்ஜிகன்–76, லவகான்–28 ஓட்டங்களை பெற்றனர்.

K.C.C.C அணியை சார்ந்த பிரதீஸன் 9 ஓவர்களில் 31 ஓட்டங்களை கொடுத்து 3 விக்கெட்டுகளையும் நிமலதாஸ் 8.1 ஓவர்களில் 24 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டையும் சாம்பவன் 10 ஓவர்களில் 41 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய K.C.C.C அணி 37.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை பெற்றது.பானுஜன்–38, பிரவீன்–26,சத்யன்–21 ஓட்டங்களை பெற்றனர். T.C.C அணியை சார்ந்த சுஜன் 10 ஓவர்களில் 36 ஓட்டங்களை கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றினார்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 13 ஆவது ஆண்டாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு (RATING) K.C.C.C அணி 8.02 புள்ளிகளையும், T.C.C அணி 2.18 புள்ளிகளையும் பெற்றனர். (4)

# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

## 12 ஆம் நாள் போட்டி முடிவு





வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரின் நேற்று முன்தினம் நடைபெற்ற பதினொராம்நாள் போட்டியின் முதல் போட்டிYoungmpans Lions அணிக்கும் Navindiloor Avengers அணிக்கும் இடையில் நடைபெற்றது.

போட்டியில் யாங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியினர் 2:1 என்ற அடிப்படையில் கோல்களைப் பெற்றுக்கொண்டு வெற்றிபெற்றதனால் சுற்றுப் போட்டியின் அரை இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக யங்கம்பன்ஸ் லயன்ஸ் அணியின் பின் கள வீரர் ஜெகதீஷ் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டி Valarmathy Xtreme அணிக்கும் Colins Strikers அணிக்கும் இடையில் நடை பெற்றது.

மேற்படி போட்டியில் வளர்மதி எக்ஸ்ரீம் அணியினர் 6:0 'என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளனர்.

போட்டியின் நாயகனாக 5 கோல்களைத் தனது அணிக்காகப் பெற்றுக் கொடுத்த வளர்மதி எக்ஸ்ரீம் அணியின் முன்கள வீரர் யோகன் தெரிவு செய்யப்பட்டார். (4)

# கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடர்

## அரையிறுதிப் போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் ஆதரவுடன் நவிண்டில் கலைமதி விளையாட்டு கழகம் நடத்தும் கலைமதி சொக்கர் மாஸ்டர்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரின் ஓர் அரையிறுதி ஆட்டம் Youngmpans Lions அணிக்கும் SK Raiders அணிக்கும் இடையில் இன்று மாலை 4:30 மணிக்கும், மற்றைய அரையிறுதி ஓர் அரையிறுதி ஆட்டம் Valarmathy Xtreme அணிக்கும் Valvai Friends அணிக்கும் இடை யில் நாளை மாலை 4:30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (4)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2669

கம்ஷாயினி




கோபினா




கஸ்தூரி




விலேஷ்




யுதேஷ்




தாஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் வாக்களித்ததன் நோக்கத்தை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

வாக்களித்த தமிழ் தரப்பினர் தமிழர்களின் அரசியல் நலன் சார்ந்து இவர்களிடம் எதிர்பார்த்து முன்வைத்த கோரிக்கைகள் என்ன? என்பது தொடர்பாக தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மக்கள் எழுச்சியால் பதவி விலகிய கோட்டாபயவின் எஞ்சிய பதவிக்காலத்தை நிறைவு செய்ய பாராளுமன்றில் நடத்தப்பட்ட வாக்களிப்பில் தற்காலிக ஜனாதிபதியாக பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையை பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பல நபர்களும் பல கொடுக்கல் - வாங்கல்களும் உள்ளதாக கூறப்படுகிறது.

எது எவ்வாறு இருப்பினும் வடகிழக்கு மற்றும் மலையக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் வெற்றியின் பங்குதாரர்களாக உள்ளனர். அதே போன்று டலஸ் அழக பெருமவிற்கு வாக்களித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இவர்களுக்கு வாக்களித்த தமிழ் தரப்பினர் தமிழர்களின் அரசியல் நலன் சார்ந்து இவர்களிடம் எதிர்பார்த்து முன்வைத்த கோரிக்கைகள் என்ன? என்பது தொடர்பாக தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதியாவதற்கு போட்டியாளர்களாக முன் நின்ற எவருமே தமிழ் மக்களை பொறுத்தவரையில் நம்பிக்கை அற்றவர்கள். இதில் அநுரகுமார திஸாநாயக்கவிற்கு எந்த ஒரு தமிழ் உறுப்பினர்களும் வாக்களிக்கவில்லை. ஆனால் ஏனைய இருவருக்கும் வாக்களித்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நின்று அவர்களுக்கு வாக்களித்த நோக்கத்தை வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்தார். (4-6-285)

# 4 இலட்சம் ரூபாய் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் 4 இலட்சம் ரூபாய் பணத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, சிதம்பரம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 4 இலட்சம் ரூபாய் பணம் திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகரால் சிதம்பரபுரம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாடு தொடர்பில் பொலிஸார் துரித நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சிதம்பரபுரம் பகுதியில் வீதி புனரமைப்பு பணியில் ஈடுபட்டிருந்த இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த 50 வயது நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து திருடப்பட்ட 4 இலட்சம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் குறித்த நபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-250)

# சிறுபோக அறுவடைக்கு எரிபொருள் வழங்கி வைப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள்குளம் விவசாயிகளுக்கு சிறுபோக அறுவடைக்கு முதலாம் கட்ட எரிபொருள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் கமநல சேவை நிலையம் என்பவற்றின் ஒழுங்குபடுத்தலில் துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் குறித்த எரிபொருள் வழங்கப்பட்டது.

அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் 330 ஏக்கரில் சிறுபோகம் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் 72 ஏக்கருக்குரிய எரிபொருளே நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

மிகுதி விவசாயிகளுக்கான எரிபொருளினை பெற்றுக் கொடுப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம், துணுக்காய் கமநல சேவை நிலையம் என்பன நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை கோட்டை கட்டியகுளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கை அறுவடைக்காக இதே ஒழுங்குபடுத்தலில் இரு கட்டங்களாக எரிபொருள் வழங்கப்பட்டுள்ளது. (4-350)

# போலி எரிபொருள் இணையத்தளம் தொடர்பில் மக்கள் அவதானம்!

(கொழும்பு)

தேசிய எரிபொருள் அனுமதி (QR குறியீடு) பத்திரத்தை உத்தியோகபூர்வ அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட (National Fuel Pass) http://fuelpass.gov.lk மூலம் மட்டுமே பெற முடியும் என்பதை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) பொது மக்களுக்கு அறிவித்துள்ளது.

இதேவேளை தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அங்கீகரிக்கப்படாத இணைய தளங்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளன.

இதனால் இது குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது. (4-6)



கிளிநொச்சியில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி நேற்று முன்தினம் நடைபெற்றது. கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனையும் கிளிநொச்சி வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்து இப்பயிற்சி நெறியினை நடத்தி இருந்தனர். போசாக்கு உணவு மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி நெறியாக இது அமைந்திருந்தது. (படம்:- கிருஸ்ணகுமார்)

# ஆடிப்பிறப்பு விழா

(பூநகரி)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பூநகரி பிரதேச செயலகத்தால் ஆடிப் பிறப்பு விழா பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் அகிலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-6-84)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 450 | 400 | 500 | 550 |
| தக்காளி | 200 | 250 | 270 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 350 | 200 |
| கோவா | 280 | 280 | 300 | 320 |
| கரட் | 250 | 300 | 360 | 400 |
| பூசணி | 160 | 250 | 200 | 250 |
| புடோல் | 160 | 120 | 200 | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200-350 | 380 |
| பெரிய வெங்காயம் | 240 | 220 | 200 | 220 |
| பாகற்காய் | 300 | 200 | 300 | 400 |
| வெண்டக்காய் | 160 | 120 | 120 | 320 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 240 | 260 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 200 |
| லீக்ஸ் | 250 | 250 | 250 | 280 |
| பீற்றூட் | 250 | 220 | 280 | 300 |
| கறிமிளகாய் | 600 | 400 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 350 | 300 |
| போஞ்சி | 450 | 400 | 430 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | — | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 300 | 250 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 200 | 250 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 300 | 360 |
| முள்ளங்கி | 140 | 100 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | — | 120 |

# எல்லை தாண்டிய மீன்பிடி ஆறு இந்திய மீனவர்கள் கைது

(மன்னார்)

இராமேஸ்வரத்திலிருந்து நேற்று முன்தினம் மீன்பிடிக்கச் சென்ற ஒரு படகையும், அதிலிருந்த 6 மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்து சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக இரண்டு படகையும் அதில் இருந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர்.

இதில் ஒரு படகையும் அதிலிருந்த 5 மீனவர்களும் இயந்திரக்கோளாறு காரணமாக காற்றின் வேகத்தால் எல்லை தாண்டி வந்ததாக மீனவர் தெரிவித்ததையடுத்து படகை [illegible] செய்த இலங்கை [illegible] யினர் இயந்திரக் கோளாறு உறுதி செய்யப்பட்ட தையடுத்து அந்தப் படகையும் அதிலிருந்த 5 மீனவர்களையும் தமிழகத்திற்கு திருப்பி அனுப்பினர்.

ஏனையோர்களிடம் இலங்கை கடற்படையினர் நடத்திய முதல் கட்ட விசாரணைக்கு பின்னர் 6 மீனவர்களும் மன்னார் மீன் வளத்துறை அதிகாரிகளிடம் [illegible] மன்றத்தில் [illegible]படுத்தப்பட உள்ளனர். (4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்ற தயார்

## பிரித்தானியா அறிவிப்பு

(கொழும்பு)

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்த்துள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் சாரா ஹில்டன் தனது டுவிட்டர் பக்கத்தில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அத்துடன் புதிய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற பிரித்தானியா எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிடடுள்ளார். அமைதியான முறையிலும் ஜனநாயகத்தை பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் எனவும் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் சாரா ஹில்டன் மேலும் தெரிவித்துள்ளார். (4-6)

# பிரசவ வலியால் துடித்த பெண்ணுக்கு உதவிய பொலிஸார்



(அராலி)

தொல்புரம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் பிரசவ வலியினால் துடித்த வேளை வட்டுக்கோட்டை பொலிஸார் தமது பொலிஸ் வாகனத்தை கொடுத்து அந்தப் பெண்ணிற்கு உதவினர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் மாலை குறித்த பெண்ணிற்கு பிரசவ வலி ஏற்பட்ட வேளை அவர் முச்சக்கரவண்டி மூலம் யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் சென்று கொண்டிருந்தவேளை திடீரென முச்சக்கர வண்டியில் இருந்த பெற்றோல் தீர்ந்து போனது. இதனை அவதானித்த வட்டுக்கோட்டை பொலிஸ் உத்தியோகத்தர் முச்சக்கரவண்டிக்கு பெற்றோல் வழங்கினார்.

இருந்தாலும் முச்சக்கர வண்டியானது இயங்க மறுத்தது. இதனை அவதானித்த வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸாருக்கு சொந்தமான வாகனத்தினை வழங்கி குறித்த கர்ப்பிணிப் பெண்ணை உரிய நேரத்தில் மருத்துவமனையில் சேர்ப்பதற்கு வழி செய்தார்.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் இந்த நெகிழ்ச்சிகரமான செயலை அனைவரும் பாராட்டி வருகின்றனர். (4-6-104)

# ஜனாதிபதி ரணிலுக்கு எதிரான போராட்டங்கள் தொடரும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க, ஊழல் முறைமைக்கு எதிராக எமது அமைதியான போராட்டங்கள் தொடரும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவிலே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றம் மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஒரு முடிவை எடுத்துள்ளது. ராஜபக்ஷ ஆட்சியால் ரணில் விக்கிரமசிங்க கொண்டு வரப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும் என காலிமுகத்திடல் போராட்டக்காரர்களும் தங்களது போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரகசிய வாக்கெடுப்பின் போது இலங்கையின் 8 ஆவது நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

பொது மக்களின் விருப்பத்திற்கு மாறாக ஜனாதிபதி நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவர் பதவி விலக வலியுறுத்தி அமைதியான முறையில் போராட்டம் தொடரும் எனவும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர். (4-6)



தேசிய மாணவர் படையணியின் இருபதாவது படைப்பிரிவின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நேற்று முன்தினமம் புதன் கிழமை இரத்த தான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் 51 ஆவது,512 ஆவது படைப்பிரிவு ,51 ஆவது காலாட் படையணி ஆகியவற்றின் சிவில் ஒழுங்கமைப்பு அதிகாரிகள், படைப்பிரிவின் அதிகாரிகள், மாணவச் சிப்பாய்கள், நலன் புரிகள், பழைய மாணவ சிப்பாய்கள் என 100 பேர் இரத்த தானம் செய்தனர். (படம் - சிவசாந்தன்)

# தங்க நகைகளை கொள்ளையிட்ட நபருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

ஆலயத்தில் வைத்து பெண் ஒருவரின் தங்க நகைகளை கொள்ளையிட்ட சந்தேக நபரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் கிருஷாந்த் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் சென்ற பெண் ஒருவர், முன்னதாக அருகாமையில் உள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு சென்ற நிலையில் அங்கு வைத்து 91/4 பவுண் தங்க நகை கொள்ளையிடப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நேற்று முந்தினம் புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

அவரை இம் மாதம் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்ட நீதிவான் அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறும் கட்டளை பிறப்பித்தார். (4-6-60)

# இராசிபலன்

22.07.2022
ஆடி 06, வெள்ளிக்கிழமை
நவமி பிற்பகல் 2.01 மணிவரை

பரணி முன்னிரவு 8.56 மணிவரை
சுபநேரம் 6.01-7.31 மணிவரை
இராகுகாலம் 10.31-12.01 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்

வளவன்



மேஷம்: திட்டமிட்ட காரியங்கவில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



கடகம்: நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம்.



துலாம்: பிற இனத்தவரால் பெருமை வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.



மகரம்: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.



ரிஷபம்: பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.



சிம்மம்: வியாபார விருத்தியுண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், ஆன்றோர் சந்திப்புண்டு.



விருச்சிகம்: பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.



கும்பம்: எதற்காகவும் வீண் பிடிவாதம் செய்வதையும் தவிர்ப்பது நல்லது. பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.



மிதுனம்: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



கன்னி: தொழிலில் அதிகாரிகளை விமர்சித்தலை தவிர்ப்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலை தோன்றி மறையும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



தனுசு: கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.



மீனம்: குடும்பத்துக்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பொதுநல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

இந்த உலகத்திலேயே உனக்கு மிகவும் முக்கியமானவன் நீ தான்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவ முன்வாருங்கள்
## சர்வதேச நாடுகளிடம் ஐ.நா. வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அந்நாட்டுக்கு அதிக ஆதரவு வழங்கப்படவேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் குழு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

உயர்ந்த பணவீக்கம், பொருட்களின் விலை உயர்வு, மின் பற்றாக்குறை, முடங்கும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதாரச் சரிவு ஆகியவை குறித்து அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட உணவு, எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் என்பவற்றின் தட்டுப்பாடுகள் காரணத்தால் கடந்த மாதங்களில் வெடித்த மக்கள் புரட்சியால் நாடு அதிர்ந்துள்ளது.

கொழும்பில் உள்ள முக்கிய அரசாங்க கட்டடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டதால் அவ்வேளை ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் தனது பதவியில் இருந்து விலகினார்.

இதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களால் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இருந்தபோதும், நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் குறைவு, வரிக் குறைப்புக்கள் மற்றும் சேவைக் கடன் செலுத்துதல் போன்ற பொருளாதார சீர்திருத்தங்களால் நிலைமை சிக்கலானது.

இந்த நெருக்கடி மனித உரிமைகள் மீது கடுமையாக தாக்கியுள்ளது. இதனால் உணவு, சுகாதாரப் பாதுகாப்பிற்கான நீண்டகால சீர்குலைவு, நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், கடன் நெருக்கடியானது மனித உரிமைகளை செயற்படுத்துவதில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் வெளிநாட்டுக் கடன் மற்றும் சுதந்திர நிபுணர் அத்தியா வோரிஸ் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கு, சர்வதேச நாணய நிதியம் உடனான பேச்சுவார்த்தைகள் உட்பட எந்தச் செயற்பாடும் மனித உரிமைகளை கருத்திற்கொண்டே இடம்பெற வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# புகையிரத கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

புகையிரதக் கட்டணங்கள் இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜூன் மாதம், ரயில் கட்டணங்கள் மற்றும் பிற ரயில் கட்டணங்களை அதிகரிப்பதற்கான முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி அளித்தது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக புகையிரத திணைக்களத்தில் தொடர் நட்டங்கள் மேலும் அதிகரித்துள்ளதால் உரிய சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இன்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் புகையிரத கட்டணங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய முதலாம், இரண்டாம் வகுப்பு ஆரம்ப கட்டணம் 50 ரூபாவாகவும், மூன்றாம் வகுப்பு ஆரம்ப கட்டணம் 20 ரூபாவாகவும் திருத்தம் செய்யப்பட்டு புதிய கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# மயந்த திஸாநாயக்க இராஜினாமா



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி ஆதரித்த டலஸ் அழகப்பெரும தோல்வியடைந்ததையடுத்து, சஜித் அணிக்குள் முரண்பாடு அதிகரித்து வருகின்றது.

அதன் வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அணி தலைவர் பதவியில் இருந்து மயந்த திஸாநாயக்க இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர், பொதுச்செயலாளர் ஆகியோருக்கு இராஜினாமாக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மயந்த திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலின் ஊடாக பாராளுமன்றத்துக்குப் பிரவேசித்தார்.

இதேவேளை, மயந்த் திஸாநாயக்க எம்.பி., ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து முழுமையாக விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-6)

# எதிர்வரும் 25 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனம்

(கொழும்பு)

எதிர்வரும் 25ஆம் திகதியினை டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள நிலையிலே எதிர்வரும் 25 ஆம் திகதி டெங்கு ஒழிப்பு தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

**நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா - 2022/23 (அணி IV)**

**(Postgraduate Diploma in Library and Information Science)**

மேற்படி சுயநிதிக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒரு கற்கை நெறியில் பட்டம்

**அல்லது**

இலங்கை நூலகச் சங்கத்தின் Associateship/ Chartered Librarianship தகுதியுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகமொன்றில் 10 வருடங்கள் சேவையாற்றிய அனுபவம்

2. ஆங்கிலத்தில் திருப்திகரமாக தொழில் செய்வதற்கான அறிவு
3. கணனிப் பிரயோகத்தில் திருப்திகரமான அறிவு (முன்னுரிமை)

பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக்கூடிய வேறு தகைமைகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தற்போது நூலக வேலையுடன் தொடர்புடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தெரிவு முறைமை:-**

➢ நேர்முகத் தேர்வு

**கற்கைக் காலம்:** ஒரு வருடம்
**மொழி மூலம் :** தமிழ்
**கற்கைநெறிக் கட்டணம் :** 125,000/- *(5000/- மீள அளிக்கப்படும்)*
**விண்ணப்பப்படிவக் கட்டணம்:** 1,000/-
**விண்ணப்ப முடிவுத்திகதி : 31.08.2022**

**விண்ணப்பப்படிவம் பெறும் முறை:**

1. மக்கள் வங்கியின் ஏதாவதொரு கிளையில் பணம் வைப்பிலிடும் வைப்புச் சீட்டில் **(190042160001824)** எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்திற் கான ரூபா 1000/- கட்டணத்தை செலுத்திய பின் வைப்புச்சீட்டை உயர்பட்டப் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக் கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து உதவிப்பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக்கழக வலைத்தள வசதியூடாகவும் *(website)* பெற்றுக் கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை அனுப்புபவர்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/- பெறுமதியான காசுக்கட்டளையை மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்கு **(190042160001824)** செலுத்திய பற்றுச்சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு** பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 31.08.2022 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு உதவிப்பதிவாளர், உயர் பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள், சரியாக பூரணப்படுத்தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு : 27.01.2022 திகதிய பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம், ஏற்கனவே இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.**

**பதிவாளர்.** (சி-4635)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## அண்ணன் வந்தான்!



(நேற்றைய தொடர்ச்சி)

திருடனும் எதிர்ப் பேச்சு பேசாமல் இலை முன் உட்கார்ந்தான். அப்போது பரமன் அங்கு வரவே புஷ்பா "இவர் என் அண்ணா. என் திருமணத்தின் போது வரமுடியாததால் இப்போது வந்திருக்கிறார்" என்றாள். திருடனும் "ஆமாம் நான் வேண்டாம் என்ற போதிலும் சர்க்கரைப் பொங்கலை இவள் செய்து போட்டு விட்டாள்" என்றான்.

இதேசமயம் வாசல் கதவை யாரோ தட்டவே பரமன் போய்க் கதவைத் திறந்தான். அங்கு நின்ற இரு காவல் வீரர்கள் "இங்கே யாராவது திருடன் ஓடி வந்தானா?" என்று கேட்டார்கள். பரமனும் "இல்லையே. என் மைத்துனர்தான் வந்திருக்கிறார். என் மனைவி அவருடன் பேசிக் கொண்டிருக்கிறாள்" என்றான். காவல் வீரர்கள் மேற்கொண்டு எதுவும் கேட்காமல் சென்று விட்டார்கள். பரமன் வாசல் கதவைத் தாளிட்டு விட்டு உள்ளே வந்ததும் புஷ்பா "என் அண்ணன் அவசரமாகப் போக வேண்டும். உங்களைப் பார்த்தாயிற்று. இனிப் புறப்படுவதாகக் கூறுகிறார் என்றாள். பரமனோ முதல் தடவையாக என் மைத்துனர் வந்திருக்கிறார். இப்படியா அனுப்புவது? கூடாது. முன்புற அறையில் கட்டிலைப் போடு. அவர் போவது பற்றி நாளை பேசலாம் என்றான். புஷ்பா முன் அறையில் கட்டிலைப் போட்டு விட்டுத் திருடனிடம் உன்னை என் கணவரிடமிருந்து காப்பாற்றி விட்டேன். நீ எதையும் திருடாமல் நாங்கள் தூங்கிய பிறகு வாசல் கதவைத் திறந்து கொண்டு போய் விடு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறி விட்டுப் படுக்கை அறைக்குச் சென்றாள்.


அவள் படுத்துத் தூங்கிக் கண் விழித்த போது நன்கு விடிந்து விட்டது. பரமன் இன்னமும் விழித்துக் கொள்ளவில்லை. அவள் எழுந்து முன்புற அறையைப் பார்த்தாள். அங்கு திருடன் இருக்கவில்லை. ஒருவாறு திருப்தி அடைந்த அவள் பெட்டிகள் வைக்கப் பட்டிருந்த அறைக்குப் போனாள். அங்கு எல்லாப் பொருட்களும் சிதறி விழுந்து கிடந்தன.

அவள் ஆவென அலறவே பரமன் என்ன என்ன என்று கேட்டவாறே ஓடி வந்தான். அப்போது புஷ்பா "அந்தத் திருடன் நம் பொருட்களை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டானே" என்று கூறிப்புலம்பினாள்.

பரமனும் "அந்தத் திருடனா? அப்படியானால் அவன்..." என்று இழுக்கவே புஷ்பாவும் "நேற்று வந்தவன் என் அண்ணன் இல்லை. பக்காத் திருடன். நான் மூளை கெட்டு திருட்டுத்தனமாகச் செய்து வந்த செயலை மறைக்கப் பொய் சொன்னேன். அது இப்படி முடிந்தது" என்று கூறி தான் தினமும் உணவு தயாரித்து உண்டதையும் முன்னிரவு சக்கரைப் பொங்கல் செய்த விபரத்தையும் கூறினாள். (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## கவிதை அரங்கேறும் நேரம்



ஏழடுக்கில் உயர்ந்து நின்றது அந்த மாளிகை. நுழைவாசலிலிருந்து மேல் மாடம் வரை விளக்குகளின் ஒளி பளிச்சிட்டது. நான்காம் மாடியில் மட்டும் சற்றே ஒளி மங்கி மெல்லிய கீற்றான வெளிச்சம் மாத்திரம் தெரிந்தது.

அங்கே...

மிகுந்த வேலைப் பாடுகளுடன், முத்துகள் இழைத்த கால்களுடன் இருந்தது அந்தக் கட்டில். அதன் மேல் ஆணழகன் கோவலன். அவன் அணைப்பில் பயத்திலும் வெட்கத்திலும் படபடக்கும் கண்களுடன் கண்ணகி.

மஞ்சத்தில் தூவியிருந்த மலர்களின் வாசமும், சாளரம் வழியே நுழைந்த கடற் காற்றும் மன்மதனின் மலர்க் கணைகளைக் காட்டிலும் அதிக சக்தி மிக்கவையாக இருந்தன. நிலவொளிக்கு மட்டும் ஏன் குறை வைக்க வேண்டும்? கண்ணகியும், கோவலனும் அங்கிருந்து நீங்கி ஏழாவது மாடிக்குச் சென்றனர்.

அது வெட்ட வெளி நிலா முற்றம். அங்கிருந்த மலர்ப்படுக்கையில் அவர்கள் அமர்ந்தபோது சூரியனும் சந்திரனும் அருகருகே அமர்ந்திருப்பதுபோல இருந்தது.

கண்ணகியின் அழகை அங்குலம் அங்குலமாக ரசித்தான் கோவலன்.

அத்தனை நெருக்கத்தில், தனிமையில், ஓர் அழகிய பருவப் பெண்ணுடன் இருக்கிற முதல் அனுபவம். அதுவே போதை தருவதாக இருந்தது. பார்வையே போதும், வேறொன்றும் வேண்டாம் என்று தோன்றியது.

காமம், கண்களின் வழியே உள்ளே செலுத்தப்படுவது, வார்த்தைகளாக வெளியே வருவது, தொடுதல்களால் தீட்டப்படுவது, அணைத்தாலும் அணையாதது, கொடுத்தால் குறையாதது. பரிமாறுபவரும் பசியாறும் அந்த விநோத விருந்து தொடங்க இருந்தது. கண்ணகியின் பார்வையிலிருந்து வெளியேறி, கோவலனின் உட்சென்ற காமத் தீ வார்த்தைகளாக அவனிடமிருந்து வெளி வந்தது.

கண்ணகியைக் கூந்தலிலிருந்து குதிக்கால் வரை தேர்ந்த தமிழில் வர்ணித்தான். தெய்வங்களின் அணிகளை அவள் அணிந்திருக்கிறாள் என்றான். 'தேவலோகப் பாவையர் உனக்கு ஈடில்லை' எனச் சொன்னான். 'அன்னங்களும் மயில்களும் உன் முன்னால் தோன்ற நாணி ஒளிந்தன' என வர்ணித்தான். பச்சைக் கிளி அவளது கொஞ்சு மொழியில் நாணினாலும் அந்தக் கொஞ்சலைக் கற்பதற்காக அவளிடமிருந்து நீங்காமல் இருந்தது என்று புகழ்ந்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு மிகவும் பிடித்தமான காட்சிகள் எப்போதும் நம் துயரமான சிந்தனைகளை வெளியே சொல்வனவாகவே அமைந்துள்ளன. —அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கஷ்டம் நீங்கின் ஆட்சி நிலைக்கும்

குருசேத்திரப் போர் ஆரம்பமாகப் போகிறது. பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் சேனைகளைத் தயார்படுத்தியுள்ளனர்.

விடிந்தால் போர் எனும் அளவில் துரியோதனனின் தந்தையாகிய திருதராட்டிரன் தலைமைக்குருவைப் பார்த்து ஐயன்மின்! இப்போரில் வெற்றி யார் பக்கம் உளது என்று கேட்கிறார்.

அதற்கு மாமுனிவர்; தர்மம் எங்குள்ளதோ வெற்றி அங்குளதாகும் எனப் பதிலளிக்கின்றார்.

இப்போது இலங்கையில் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகக் கொண்ட அரசாங்கம் அமைந்துள்ளது.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைக் கூறித்தானாக வேண்டும்.

அதாவது எடுக்கவும் கொடுக்கவும் கடவுள் நினைத்துவிட்டால் அதனை யாராலும் தடுக்க முடியாது என்ற உரிமை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் மூலம் நிரூபணமாகியுள்ளதென்பதுதான் அந்த விடயம்.

உண்மை ஐக்கிய தேசியக் கட்சியில் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார்.

உண்மையில் அந்தப் பிரதமர் பதவியை ஏற்குமாறு சஜித் பிரேமதாஸவிடமே ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ கேட்டிருந்தார்.

ஆனால் அதனை பல தடவைகள் சஜித் பிரேமதாஸ நிராகரித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றை எம்.பியான ரணிலை அழைத்து நீங்கள் பிரதமர் பதவியைப் பொறுப்பெடுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

அவர் கேட்ட மாத்திரத்தில் அதற்கென்ன நான் பிரதமராகப் பதவியேற்கிறேன் என்றார் ரணில்.

அவர் அவ்வாறு கூறியதும் அதிர்ந்து போன சஜித் தானும் பிரதமர் பதவியை ஏற்க முடியும் என்றார்.

எனினும் அதுகாலம் கடந்த ஞானம் என்பதாகக் கதை முடிந்துபோக, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார்.

கிடைத்த சந்தர்ப்பத்தை சஜித் பிரேமதாஸ தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்ற கருத்து அவரது கட்சிக்குள் புயலாக வீசியது.

அது சஜித்தின் தலைமைத்துவப் பண்பைச் சோதிப்பதாகவும் அமைந்தது.

நிலைமை இதுவாக இருக்கையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக மக்கள் போராட்டம் செய்வர். புரட்சி வெடிக்கும் என்ற அறிக்கைகள் வெளிவந்தாலும் இன்றைய சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமான ஜனாதிபதி என்று கருதுகின்ற சிங்கள மக்களும் இருக்கின்றனர் என்பதை எவரும் நிராகரித்துவிட முடியாது.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்கவின் பதவி நீடிக்குமா, இரண்டு ஆண்டுகளுக்கு நிலைக்குமா என்று கேட்டால், மக்களின் அடிப்படைப் பொருளாதார கஷ்டங்கள் நீங்கினால் ரணிலின் ஆட்சி நிலைக்கும்.

இல்லையேல் மக்கள் புரட்சி மீண்டும் வெடிக்கும்.

# புதிய ஜனாதிபதி ரணிலின் கீழ் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள மத்திய வங்கி ஆளுநர், புதிய ஜனாதிபதி சீர்திருத்தங்களின் வலுவான ஆதரவாளர் எனவும் தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் பொருளாதாரம் அடுத்த இரு மாதங்களில் 70வீதமாக அதிகரித்த பின்னர் செப்டம்பரில் குறைவடைட்டும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 17 ஆவது சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் சர்வதேச நாணயநிதியம் நிதியை வழங்க ஆரம்பித்ததும் உலக வங்கியும் ஆசிய வங்கியும் மேலதிகமான நான்கு பில்லியன் டொலர்களை வழங்கலாம் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடி என்பது இலங்கையின் ஆட்சியாளர்களிற்கு ஒரு பாடம் எனவும் தெரிவித்துள்ள அவர் இந்த நெருக்கடி மூலம் கற்றுக் கொண்ட அனுபவம் காரணமாக சர்வதேச நாணயநிதியத்துடனான திட்டம் முடிவடைந்ததும் அவர்கள் சீர்திருத்தங்களை கைவிடக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

திட்டங்கள் முடிவடைந்ததும் அதிகாரிகள் பின்னோக்கி நகர்வதையும் சிறந்த கொள்கைகளை கைவிடுவதையும் நாங்கள் பார்த்திருக்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கோவிட் தொற்று மேலும் இருவர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 2 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16,535 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## மஹோற்சவம்

மிருசுவில் ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

31 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுதினம் 1 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளம் நீர் வழங்கல் சபை, ரந்தெனிய கல்லுடைக்கும் ஆலை, அறுகம்புல்வெளி, அவறந்துலாவ, நவக ம்மானே, பாவற்குளம், பாரதிபுரம், கூமாங்குளம், நாகரிலுப்பைக்குளம், நெளுக்குளம் கலைமகள் பாட சாலையடி, நொச்சிக்குளம், அவுசதப்பிட்டிய, பழையனூர், பாண் சின்னகுளம், பொன்னாவரசங்குளம், இராஜேந்திரகுளம், சாம்பல் தோட்டம் வீட்டுத்திட்டம், சூடுவெந்தபுலவு, துடாரிக்குளம், உளுக்குளம், உளுக்குளம் எல்.பி. குடியிருப்பு, விநாயகபுரம் வீட்டுத்திட்டம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஆன்றோரர்களின் நூல்களில் அசையாத நம்பிக்கை வைக்க வேண்டும். அயலூருக்கு போகின்ற நாம் கைகாட்டி மரத்தை நம்பினாலொழியப் பிரயோசனப்படாது. புகை வண்டியில் போகின்ற நாம் கால அட்டவணையை நம்பினாலன்றி பிரயாணம் செய்ய முடியாது. அது போல் ஜீவ யாத்திரைக்கு ஆன்றோர்கள் எழுதிய அறிவு நூல்கள் நமக்கு வழிகாட்டுகின்றன. எனவே எங்குமாய், எல்லாமாய், அறிவு வழியாய், கருணை மயமாய் விளங்கும் இறைவனைச் சிந்தித்தும் வழுத்தியும் வந்தித்தும் ஆன்ம இலாபத்தைப் பெறுவோமாக.

## QR முறை மூலமாக 30 இலட்சம் வாகனங்கள் பதிவு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் விநியோக நடவடிக்கைக்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அட்டை ஊடான கியூ.ஆர் முறைமைக்கு 30 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவிக்கிறது.

அரசாங்கத்தால் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளத்தின் ஊடாக மாத்திரம் பதிவு செய்யுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், தனிப்பட்ட தகவல்களை சேகரிக்க முயற்சிக்கும் அங்கீகரிக்கப்படாத இணையதளங்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதால், அது குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெறும் 4 நாட்களில் 30 இலட்சம் வாகனங்கள் இணையத்தளத்தின் ஊடாக பதிவு செய்துள்ளதாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் குறிப்பிடுகின்றது.

எவ்வாறாயினும், வாகன இலக்க தகட்டின் கடைசி இலக்கத்தின் அடிப்படையிலேயே நேற்றைய தினம் எரிபொருள் வழங்கப்பட்டது.

அத்துடன், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பரீட்சார்த்த ரீதியாக கியூ.ஆர். முறைமை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ம-7)

## கொரோனாத் தொற்று 57 பேர் அடையாளம்

கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 57 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 664,647ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ராம நவமி

இராமர் அயோத்தியில் அவதரித்தார். சமஸ்கிருதத்தில் 'அயோத்தி' என்றால் 'யுத்தம் நடக்க முடியாத இடம்' என்று பொருள். நம் மனத்தில் போராட்டம் இல்லாத போது ஒளி உதயமாகிறது.


இராமரின் தம்பி இலட்சுமனன் சுமித்திரைக்குப் பிறந்தவர். "சுமித்ரா என்றால் 'நல்ல நண்பன்' என்று பொருள். அந்தப் பத்தும் ஒன்றோடொன்று இயைந்து இருந்தால் விழிப்புணர்வு பிறக்கிறது.

நம்முள்ளே ஒளியை நாம் காண அடிக்கடி முயற்சி செய்கிறோம். ஒரு குருஜிக்கு 56 வயது இருக்கும். அங்கே ஒரு பாலகன் கண்களை மூடிக் கொண்டு அந்த சன் யாசியைக் கேட்டார், "சுவாமி, நான் எந்த ஒளியை யும் காணவில்லை" என்று. அதற்குச் சன்யாசி பதிலளி த்தார். "நீதான் ஒளி! நீ எப்படி ஒளியைக் காண முடியும்?".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2022 - 16.08.2022



**மனதில் பட்ட கருத்துக்களை மறைக்காமல் எடுத்துரைக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு சுகஸ்தானத்தில் இருப்பதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு வரும் போது நினைத்த காரியங்கள் நிறைவேறும். நீடித்த நோய் அகலும். அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் விதத்தில் கிரக நிலைகளின் சஞ்சாரம் இருக்கிறது. ஆயினும் ஏழரைச் சனியில் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் ஒருசில காரியங்கள் தடைப்படலாம். திசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் வருகிறார். உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்திற்கு அதிபதியான அவர் 8 ஆம் இடத்திற்கு வரும் போது, "விபரீத இராஜயோகம்" செயற்படும். பகைக் கிரகம் வலுவிழக்கும் இந்த நேரத்தில் பணவரவு திருப்தி தரும். கல்வி மற்றும் அரசு வேலை தொடர்பான முயற்சிகை கூடும். புதிய நகைகளை வாங்க ஆர்வம் காட்டுவீர்கள்.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் குரு வக்கிரம் பெறும் போது எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. திடீர் திருப்பம் நிகழும். ஆரோக்கியத் தொல்லை உண்டு. உங்கள் இராசிநாதனாகவும் சுகஸ்தானத்திற்கு அதிபதியாகவும் குரு இருப்பதால் கவனத்தோடு செயற்படுங்கள்.

## ஆரோக்கியத்தில் தொல்லை உண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**

நீங்கள் நன்மை செய்தாலும், பிறருக்கு அது தீமையாகவே தெரியும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. வெளிநாட்டிற்குச் சென்றவர்களில் சிலர், வேலையின்றி திரும்ப நேரிடும். படித்து முடித்து பல காலமாக வேலையின்றி தவித்தவர்களுக்கு, தற்காலிகப் பணி அமையலாம். இந்த நேரத்தில் குல தெய்வம் மற்றும் எல்லை தெய்வங்களை வழிபடுவது நல்லது.




**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி 6 இல் வரும்போது, புதிய திருப்பங்கள் ஏற்படும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டு. புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் ஆலோசனை கைகொடுக்கும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி கிடைக்கலாம். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருந்து, தொழில் வளம் பெற வழி காட்டுவர். 12 இற்கு அதிபதியாகவும் செவ்வாய் இருப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். இட விற்பனை மூலம் தன இலாபம் கிடைக்கலாம். இம் மாதம் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் சுபச்செலவு அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் கூடும். பிள்ளைகளின் கல்யாணம், சீமந்தம் செய்யும் சூழ்நிலை உருவாகும். ஒரு சிலருக்கு, வீடு மாற்றம் அமையலாம். உறவினர் பகை அகலும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சகப் பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். குருவின் வக்கிர காலத்தில் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.



**எதையும் ஒரு முறைக்கு இரு முறை யோசித்து செயற்படுத்தும் மகர இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனி வக்கிர இயக்கத்தில் இருப்பதால் திட்டமிட்ட காரியங்கள் திசைமாறிச் செல்லலாம்.

## பூர்வீக சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள்!

ஜென்மச் சனி நடைபெறுவதால் எதிலும் கூடுதல் கவனம் தேவை.

**சிம்ம - புதன் சஞ்சாரம்**

ஆடி 13 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும்.

இருப்பினும் சனி வக்கிர இயக்கத்தில் உள்ளதால், வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் சேமிக்க இயலாது.

வீண் விரயங்களும் சுபவிரயங்களும்மாறிமாறிவரும். புதன்9 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குவதால் பூர்வீக சொத்து சம்பந்தமாக முக்கிய முடிவெடுப்பீர்கள். பயணங்கள்பலன்தரும்.

**கடக - சுக்கிரன் சஞ்சாரம்**

ஆடி 22 ஆம் திகதி, கடக இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தமஸ்தானத்திற்கு வரும்போது நன்மை உண்டாகும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். விலை உயர்ந்தப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கும். நல்ல சந்தர்ப்பங்கள் நாடி வரும் நேரம் இது.

**குருவின் வக்கிர இயக்கம்**

ஆடி 23 ஆம் திகதி, மீன இராசியில் குரு வக்கிரம் பெறுகிறார். சகோதர சகாய ஸ்தானாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்கும் குருபகவான் வக்கிர இயக்கத்தில் செயற்படும் போது, சகோதரர்களால் பிரச்சினைகள் உருவாகலாம். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குரு பகவான் சொந்த வீட்டில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. உத்தியோகத்தில் நிரந்தரப் பணி அமையும். 12 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் விரயாதிபதி குரு வக்கிரம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். பயணங்கள் பலன் தரும். வீடு மாற்றம், இட மாற்றம் விரும்பும் விதத்தில் அமையும். ஜென்மச் சனி வக்கிரம் பெற்றுள்ளதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யுங்கள்.




**ரிஷப - செவ்வாய் சஞ்சாரம்**

ஆடி 25 ஆம் திகதி, ரிஷப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும்போது சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுப்பர். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை செய்யுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் சனியின் வக்கிரத்தாலும் சுக ஸ்தானத்தில் இராகு இருப்பதாலும் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவை. குடும்பச்சுமை கூடும். கணவன் - மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும். பணிபுரியும் பெண்களுக்கு சகப் பணியாளர்களால் பிரச்சினைகள் ஏற்படலாம். வேலையைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பெரும் முயற்சி எடுக்கும் சூழல் உருவாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயு தட்டுப்...

6-7 எரிவாயு கப்பல் ஏற்றுமதிகளின் வருகை எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு தேவையான அமெரிக்க டொலர்களை நிறுவனம் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாக தலைவர் தெரிவித்தார்.

இந்த மாத இறுதிக்குள் நெருக்கடி முழுமையாக தீர்க்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று அவர் கூறினார். (ம-7)

## நாட்டின் புதிய...

விஜயதாசவின் பெயர்களும் பிரதமருக்காக பரிசீலிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## கோ ஹோம்...

சிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தினை மனோ கணேசன் தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசாங்கத்தையும் பாராளுமன்றத்தையும் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட துறைசார் குழுக்களை அமைத்து நடத்த ரணில் விரும்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## எரிபொருள்...

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெற்றோல் விநியோகத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக இன்று (நேற்று) முதல் 29ஆம் திகதி வரை நாளாந்தம் 15 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட இருக்கின்றது.

மக்கள் எந்தவித நெருக்கடியையும் ஏற்படுத்தாது அமைதியாக இருந்து எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும்.

டீசலை பொறுத்தவரை 8 தொடக்கம் 10 வரையான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 25ஆம் திகதி வரை தொடர்ச்சியாக விநியோகிக்கப்படுவதற்குரிய அட்டவணை இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகம் ஆரம்பித்திருக்கின்ற நிலையில் பொதுமக்கள் ஒன்று கூடி நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும் அதேபோன்று எரிபொருள் பெறுவதற்குரிய விதிமுறை மற்றும் அறிவுறுத்தலை பின்பற்றாமலும் இருப்பதால் அங்கு ஒரு குழப்பமான நிலை உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றது.

ஆகவே எரிபொருளை பெற்றுக் கொள்ளும் பொதுமக்கள் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவரும் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். அரசாங்கத்தினால் தேசிய எரிபொருள் விநியோக அனுமதிப் பத்திர முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக 25ஆம் திகதிக்கு பின்னதாக கட்டாயமாக அமலில் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் அந்த முறைமை முழுமையாக அமுல்படுத்தும் வரை யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்கனவே பிரதேச செயலாளர்களால் வழங்கி இருக்கின்ற எரிபொருள் விநியோக அட்டைகளை பயன்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறோம் என்றார். (ம-7,18,33)

## இளம் செயற்பாட்...

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்கவிற்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முன்னொருபோதும் இல்லாத சவால்களின் பிடியில் எங்கள் நாடு சிக்கியுள்ள தருணத்தில் அதன் ஆட்சிபொறுப்பை ஏற்கின்றார்.

இலங்கையின் பெரும்பான்மையான பிரஜைகளின் ஆதரவுடன் இளம் செயற்பாட்டாளர்களின் அசாதாரணமான செயற்பாட்டினால் இந்த மாற்றம் சாத்தியமானது என்பதை ஜனாதிபதி விக்கிரமசிங்க நினைவில் கொள்வார் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை. அவர்களின் கடுமையான அழைப்பு மக்களின் நலனிற்கான ஆட்சிக்கானதே தவிர, தனது நலனிற்கான ஆட்சிக்கானதல்ல.

சட்டத்தின் ஆட்சி நேர்மை, நல்லாட்சி நிலவும் ஆட்சிக்கானதே. அவர்களின் குரல்கள் ஊழல்களில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகளிற்கு எந்த இடமும் அளிக்காத அரசாங்கத்திற்கானது. இது மிகவும் கடினமான சவால், இதற்கு புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் அரசியல் சிவில் சமூக தலைவர்கள் தீவிர பங்களிப்பை செய்யவேண்டும்.

இது எங்கள் வரலாற்றில் தீர்க்கமான தருணம்,

இலங்கைக்கு தங்கள் இதயத்தில் தொலைநோக்கும் [illegible] யும் கொண்ட தலைவர்கள் தேவை என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## நான் என்றுமே...

பாராளுமன்றத்தில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள விகாரையில் மதவழிபாடுகளில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது சர்வதேச ஊடகமொன்றின் ஊடகவியலாளர் ஒருவர், **"நீங்களும் ராஜபக்ஷக்களும் பழைய நண்பர்கள் எல்லவா? அதில் எவ்வாறு மாற்றம் ஏற்படும்?"** என்று கேள்வியெழுப்பினார். இந்த கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"எவ்வாறு நான் ராஜபக்ஷக்களின் பழைய நண்பன் ஆவேன்? நான் அவர்களை அனைத்து சந்தர்ப்பங்களிலும் எதிர்த்திருக்கின்றேன்.

நான் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தினை ஏற்படுத்துவேன். நான் ராஜபக்ஷக்களின் நண்பன் அல்ல. மக்களின் நண்பன் ஆவேன். ஒரு ஊடகவியலாளர் என்ற ரீதியில் சிறந்த தெளிவினைப் பெற்று அதன் பின்னர் கேள்விகளை எழுப்புங்கள்.

நான் இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் பணியாற்றியிருக்கின்றேன். ஆனால் நான் அவருக்கு வாக்களித்ததில்லை.

அவர் ஒரு கட்சியைச் சேர்ந்தவர். நான் பிறிதொரு கட்சியை சேர்ந்தவன். பிறிதொரு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியுடன் பணியாற்றுவதன் அர்த்தம், நான் அவரது நண்பன் என்பதல்ல. நான் எனது கட்சியை மேலும் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை குறித்து அவதானம் செலுத்துவேன்'' என்றார். (ம-7)

## அறிவி...

பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

அரசியல் நிகழ்ச்சி நிரல், எதிர்கால நோக்கம், விமர்சன ரீதியிலான வாசிப்பு என்று எதுவுமில்லாத காதில் தோடுகளை அணிந்த தாடிக்காரர்கள் வீரர்களாக மாறி, அழகான [illegible] கூறி, சமூக செயற்பாட்டாளர்கள், நடிகர், நடிகைகள் வந்து தூண்டிவிட்ட, இறுதியில் ரணிலை அதிர் பதவிக்கு கொண்டு வர வழியை ஏற்படுத்தினர் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்திய நேரத்தைத் தவிர, அதற்கு முன்னர் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை.

அப்படி நடந்தால், ஜனாதிபதிப் பதவி தொடர்பில் அராஜக நிலைமையேற்படும் என்பதே இதற்கு காரணம். ஏன் இந்த விடயம் இளம் போராட்டக்காரர்களுக்கு புரியவில்லை.

அவர்களுக்கு அதனை புரிந்துகொள்ளும் அளவுக்கு அறிவோ, தெளிவோ, புத்தியோ இருந்ததாக எமக்கு தெரியவில்லை. போராட்டக்காரர்கள் தமது மாளிகையை முற்றுகையிட்டபோது துப்பாக்கி சூடு நடத்துமாறு உத்தரவிடாது அதிர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

இவ்வாறான நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏன் வாக்களிக்கப்பட்டது. அதற்கு பொதுவான காரணம் இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கும் தமது பாதுகாப்பு தொடர்பான மனநிலை.

எல்லாவற்றுக்கும் முதல் இந்த நிலைமையை இல்லாமல் செய்ய வேண்டும். இந்த மனநிலையை ஏற்படுத்தியது யார்? போராட்டக்காரர்கள், இரவு வீடுகளுக்கு சென்று தீயிட்ட குழுவினர் எனவும் சாடியுள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/07/21
சீட்டிழுப்பு இலக்கம் 4823
0 9 2 7 8 4 8
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 132
மிதுனம் 17 40 42 57 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1301
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 0 3 9 9 7 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 21/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1171
Z 26 01 32 50 80

கொவிசெத
திகதி 2022.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 3065
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
W 17 27 47 69
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.07.21
சீட்டிழுப்பு இலக்கம் - 853
Z 08 20 56 77
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1624
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.07.21
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,819,700/-
வெற்றி இலக்கங்கள் 09 19 73 76 H

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.07.21
சீட்டிழுப்பு இல: 3959
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,624,380/-
வெற்றி இலக்கங்கள் 02 25 48 57 U

ராசி
திகதி 2022-07-21
வெற்றி வாரம் 3510
வர்ணம் கபிலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,914,596/-
வெற்றி இலக்கங்கள் 26 28 30 53 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,141,080/-

லொட்டோ 24
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 13 24 52 54 65
சீட்டிழுப்பு வாரம் 974
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.07.21 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 248,932,069/-
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 511
திகதி 2022-07-21
வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 19 33 46
விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,364,996/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1798
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.07.21
தினம் வியாழக்கிழமை
K 62 67 76 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,011,520/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை
செல்லும் பிரதான வீதியில்
**55 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)**

- யாழ்.நகரத்தில் இருந்து 4Km தூரத்தில் அமைந்துள்ளது.
- 18 அடி பாதையுடன் 3 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல்.
- வீடுகள் அமைப்பதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் மற்றும் அனைத்துவிதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.
- பார்வையிடும் நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை
- தரகர் தேவையில்லை.

(12205)

**ஜெயம்: 077 814 7389, 077 241 7589**

# காணி விற்பனைக்கு


**யாழ். நாவற்குழி சந்தியில் 81 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- ❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- ❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- ❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை நான்கு இலட்சம் (400,000/=) மட்டும். (12199)
- ❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

❖ பார்வையிடும் நேரம் : காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 23.06.2022 வியாழக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் பூரணவேலுப்பிள்ளை அன்னலெட்சுமி

அவர்களின் சிவபேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23.07.2022) சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அன்னாரின் வீட்டில் இடம்பெற்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக் கப்படும். சபிண்டீகரண கிரியைகள் அதே தினம் நண்பகல் 12.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

AGA Lane,
வல்வெட்டித்துறை. 077 180 0868 (12196)

இங்ஙனம்
குடும்பத்தினர்

# பைடனுக்கு கோவிட்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைட



னுக்கு கொரோனா தொற்று உறுதி யாகியுள்ளது.

இதன்படி அவர் தற்போது தனிமைப்படுத் தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளது. (ம-7)


# விற்பனைக்கு உண்டு

ஏழாலை தெற்கில் சகல வசதிகளுடன் கூடிய மருந்தகம் விற்பனைக்குண்டு.

தொடர்பு (12191)

**076 637 8849**

10வருட வெற்றிகரமான சேவையில். SEP/2022

# UK அல்லது கனடாவில் உயர்கல்வி

**குறைந்த கட்டணத்தில் இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி**

எமது வீசா ஆலோசனை வாயிலாக UK, கனடா சென்ற மாணவர்களினை நேரில் வரும் சந்தர்ப்பத்தில் பார்வையிட முடியும்

நேரில்வந்து சந்தித்து இலவச ஆலோசனைகளை அறிந்து கொண்டு பயன்பெற... (12198)

WORLD EDUCATION CONSULTANCY
அலுவலகம்: புதிய உயர் கல்லூரி வளாகம் ஆரியகுளம் யாழ்ப்பாணம்
கிளை: சங்கத்தானை சாவகச்சேரி.
0779265447 / 0217200989

# வட இந்திய காசி யாத்திரை

ஆரம்பம் 04.09.2022 நாட்கள் 12

டெல்லி, மதுரா, தாஜ்மஹால், அலகாபாத், திருவேணி சங்கமம், கயா, புத்தகயா, புத்தாலயங்கள், காசி விஸ்வ நாதர், இராமேஸ்வரம், மதுரை, பிரம்மபுரீஸ்வரர் சிவன், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்.

அனைத்துச் செலவுகளும் உட்பட விபரங்கட்கு:
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
**T.P: 077 768 0102** (C-4637)


# மரண அறிவித்தல்

## வேதவனம் பாலசுப்பிரமணியம்

(முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர் - பூநகரி ப.நோ.கூ.சங்கம்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 30.12.1952 | 21.07.2022 |



ஆலங்கேணி பூநகரியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாக வும் கொண்ட வேதவனம் பாலசுப்பிரமணியம் (முன்னாள் கொள்வனவு உத்தியோகத்தர் - பூநகரி ப.நோ.கூ. சங்கம்) நேற்று (21.07.2022) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதவனம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தியாகராஜா - சரஸ்வதி தம்பதி யரின் மருமகனும் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத் தைச் சேர்ந்த ரதிகுமாரியின் (ஓய்வுநிலை உப அதிபர் - யா/வேம்படி பெண்கள் உயர்தர பாட சாலை) பாசமிகு கணவரும் அகீபன் (லண்டன்), நிலக்சன் (விரிவுரையாளர் - பொறியியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சூர்யா (லண்டன்), துவாரகி (Researcher, Idea's Consultancy, Colombo) ஆகியோரின் மாமனாரும் பூமணிதேவி, விநாயகமூர்த்தி, காலஞ்சென்ற பராசக்தி மற்றும் புவனேஸ்வரி, இந்திராதேவி (அதிபர் - கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாடசாலை), காலஞ்சென்ற சிறீகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் கோகிலா, செல்வரத்தினம், பாலகிருஷ்ணன், சுந்தரமூர்த்தி (தலைமைப்பீட கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தித் திணைக்களம், கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமாரி, வசந்தகுமாரி (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), விஜயகுமாரி (ஜேர்மன்), ரவிக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரன், பாலசிங்கம், கதிர்காமநாதன் மற்றும் ஆனந்தி (பிரான்ஸ்), கேசேந்திரன் (ஜேர்மன்), விஜிதா (பிரான்ஸ்) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.07.2022) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ரதிகுமாரி (மனைவி) 076 891 5072
அகீபன் (மகன்) 00447413182205, நிலக்சன் (மகன்) 077 959 9104 (12201)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.